# உலகத் தமிழ்ப் படைப்பாளர்களின் படைப்புகள்

## (பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)


பதிப்பாசிரியர்கள்

முனைவர் பா. தமிழரசி

முனைவர் வானதி பகீரதன்

முனைவர் இரத்தின வேங்கடேசன்

முனைவர் நா. பாலாஜி






தமிழ்த்துறை மற்றும் தமிழ் ஆய்வு மையம்

**அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி**

(தன்னாட்சி, மதுரை காமராசர் பல்கலைக்கழக இணைவு பெற்றது. தேசியத்தர மூன்றாம் மதிப்பீட்டில் 4க்கு 3.67 புள்ளிகள்) பல்கலைக்கழக மானியக்குழு வழங்கிய 'A' தகுதி (மூன்றாவது சுற்றில் திறன்மிகு கல்லூரி மற்றும் புதுதில்லி இந்திய அரசு உயிரித் தொழில் நுட்பத்துறையின் நட்சத்திரத் தகுதி, தேசியத்தர வரிசைப்பட்டியலில் (NIRF 2019) 51ஆவது இடம் பெற்றது.)

**சிவகாசி - 626 124**



Scanned with CamScanner



தேமதுரத் தமிழோசை உலகமெலாம்

பரவும்வகை செய்தல் வேண்டும் - பாரதி

ISBN : 978-93-83191-36-9

Scanned with CamScanner

# உலகத் தமிழ்ப் படைப்பாளர்களின் படைப்புகள்

## (பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)


பதிப்பாசிரியர்கள்

முனைவர் பா.தமிழரசி

முனைவர் வானதி பகீரதன்

முனைவர் இரத்தின வேங்கடேசன்

முனைவர் நா.பாலாஜி





தமிழ்த்துறை மற்றும் தமிழ் ஆய்வு மையம்

**அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி**

(தன்னாட்சி, மதுரை காமராசர் பல்கலைக்கழக இணைவு பெற்றது. தேசியத் தர மூன்றாம் மதிப்பீட்டில் 'A' தகுதி (மூன்றாவது சுற்றில் 4க்கு 3.67 புள்ளிகள்) பல்கலைக்கழக மானியக்குழு வழங்கிய திறன்மிகு கல்லூரி மற்றும் புதுதில்லி இந்திய அரசு உயிரித் தொழில் நுட்பத்துறையின் நட்சத்திரத் தகுதி, தேசியத்தர வரிசைப்பட்டியலில் (NIRF 2019) 51ஆவது இடம் பெற்றது.)

சிவகாசி - 626 124

# உலகத் தமிழ்ப் படைப்பாளர்களின் படைப்புகள்

(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)

பதிப்பாசிரியர்கள் : முனைவர் பா.தமிழரசி
முனைவர் வானதி பகீரதன்
முனைவர் இரத்தின வேங்கடேசன்
முனைவர் நா.பாலாஜி

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்கள்

முதற்பதிப்பு : டிசம்பர் 2019

வெளியீடு : பாடத்திட்ட மேம்பாட்டு அமைப்பு,
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி,
சிவகாசி.

அச்சாக்கம் : முத்து பிரிண்டர்ஸ், விருதுநகர்.

பக்கங்கள் : 580

விலை : ரூ. 700 /-

ISBN No: 978-93-83191-36-9

**International Conference on**

**Global Tamil Creations of Tamil Writers**

Editors : Dr.P.Thamilarasi
Dr. Vanathi Bakirathan
Dr. Rathina Venkatesan
Dr. N.Balaji

Copyrights : Editors

First Edition : December, 2019

Published by : Curriculum Development Cell
Ayya Nadar Janaki Ammal College, Sivakasi.

Printed by : Muthu Printers, Virudhunagar.

Pages : 580

Price : Rs. 700/-

Scanned with CamScanner

| வ.எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 1. | அகத்தியன் ஜான் பெனடிக்ட்<br>அமெரிக்கா வாழ் தமிழர் படைப்பாளர்களும் படைப்புகளும் | 1 |
| 2. | அகிலாண்டேஸ்வரி.பா<br>தில்லை நடராஜர் கோவிலும் இலக்கியப் பதிவுகளும் | 4 |
| 3. | அமுதா.ஜெ<br>சரோஜா பாண்டியன் படைப்புகளில் தொடக்கமும் முடிவும் | 8 |
| 4. | அருணாதேவி.ப<br>சிவகாசி கவிஞர் பாண்டுவின் கவிதைகளில் பெண்கள் | 13 |
| 5. | அருள் மைக்கேல் செல்வி.சி<br>விந்தியகௌரியின் சிறுகதைகள் காட்டும் மனிதர்கள் | 18 |
| 6. | அருள்மொழி.ந<br>புலம்பெயர் நாட்டில் தமிழ் இதழ் “பனிப்பூக்கள்” | 23 |
| 7. | அறிவழகன் வினோதினி<br>“சிறுவர் செந்தமிழ்” சிறுவர்களுக்கானஅறிவுரைப் பெட்டகம் | 26 |
| 8. | அன்பரசி.ப<br>பதிற்றுப்பத்தில் வீரர்களின் நிலைப்பாடு | 31 |
| 9. | அன்புசெல்வன்.தே<br>தமிழர்களின் பண்பாடு சார்ந்த வழிபாடுகள் | 36 |
| 10. | அன்னபாக்கியம்.வி<br>சு.ரா.வின் நடை | 39 |
| 11. | இரா.அன்னலட்சுமி,<br>பழந்தமிழரின் கலைத்திறன் கருவிகள் | 44 |
| 12. | அன்னலட்சுமி.இரா<br>தமிழரின் கட்டடக்கலையில் ஓவியம் | 47 |
| 13. | இரத்தின. வேங்கடேசன்<br>சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர்களில் பெண்களின் பங்கு | 50 |
| 14. | இரம்சான்.பா<br>சேரவேந்தர் ஆட்சியில் அரணாக விளங்கிய இயற்கை வளங்கள் | 53 |
| 15. | இராஜேஸ்வரி.சி<br>சிலப்பதிகாரம் - காற்சிலம்பு ஓசையிலே ஒப்பீடு | 58 |
| 16. | இருளப்பன்.சி<br>தமிழ்ப் படைப்புகள் காட்டும் அறவாழ்க்கை | 62 |
| 17. | இளமாறன்.ச<br>பொதுவுடைமை நோக்கில் பட்டுக்கோட்டையார் சிந்தனைகள் | 67 |
| 18. | இளவரசு.இரா<br>புறநானூறு புலப்படுத்தும் போருக்கான காரணங்கள் | 72 |
| 19. | இன்பராஜ்.ம<br>அப்துல்ரகுமானின் சுட்டுவிரலில் சமூகம் | 78 |


Scanned with CamScanner

# விந்தியகௌரியின் சிறுகதைகள் காட்டும் மனிதர்கள்

முனைவர் சி.அருள் மைக்கேல் செல்
உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மைய
பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை - 625 0

**முன்னுரை**

எழுத்தும் தெய்வம், எழுதுகோலும் தெய்வம் என்றார் பாரதியார். பாரதியாருக் முன்பிருந்தே கதைகள் வழக்கில் இருந்தன என்ற போதிலும் ஐரோப்பியர் வருகைக்குப் பின்ன வடிவம் பெற்றன. வார்த்தைகள் வருவதற்கு முன்பே வந்த வடிவமாகிய கதையை வரலாறுகளி தாய் என்று கூறலாம். ஊருக்கு ஊர் கதை சொல்லிகள் நிறைந்திருந்த காலம் மெல்ல மெல் மாறியும் மறைந்தும் வரும் இன்றைய சூழலில், பேராசிரியர் விந்தியகௌரி முனைப்போ முயன்று படைத்த 13 சிறுகதைகளின் தொகுப்பு "இப்படியும் சில மனிதர்கள்" ஆகும். உண்ம தங்கமங்கை, பெரியார் பிஞ்சு, நல்வழி ஆகிய இதழ்களில் எழுதப்பட்டு நூல் வடிவ பெற்றுள்ளது. இக்கதைகளில் இடம்பெற்றுள்ள மனிதர்கள் அன்பு, உண்மை, உழைப்பு, நட் உதவி, நேர்மை, இயற்கையை நேசித்தல் ஆகிய பண்புகளிலும் விழுமியங்களிலும் தல சிறந்து நிற்கின்றனர். இந்நூலில் இடம்பெற்றுள்ள மனிதர்களுள் சிலரின் பண்புகளைக் கூறுவத இக்கட்டுரை அமைகின்றது.

**நேர்மை**

உண்மையின் வழியில் நேராக நடத்துகொள்வதனைக் குறிக்கின்ற சொல் 'நேர்ம என்பதாகும். நேர்மை ஒரு தலையாய மனிதப் பண்பு. மனிதத்தின் மாபெரும் வலிமையு அற்புதமும் நேர்மையே. நேர்மை ஒரு விலை உயர்ந்த பரிசு என்கிறார் வாரன் பஃபெ நேர்மையான செயலில் ஒருவன் ஈடுபட்டால் எல்லாத் துன்பங்களிலிருந்தும் விடுபடுவான் என்கிற புத்தர். நேர்மையான நடத்தை வாழ்வளிக்கும் மரத்திற்கு இட்டுச் செல்லும் என்றும் நேர்மையா இவ்வுலகிலேயே கைம்மாறு பெறுவர் என்றும் கூறுகின்றது நீதிமொழி. ஒருவரின் உரு அமைப்பை வைத்தோ, கல்வி அறிவை வைத்தோ, தொழில் அல்லது இருக்கும் பதவியை வைத்தோ இதனை மதிப்பிட முடியாது. ஒருவர் நடந்து கொள்ளும் குண இயல்பைப் பொறுத்த தானாகவே வெளிப்படும் தன்மை கொண்டது ஆதலால், பொருட்செல்வத்தைக் காட்டிலு நேர்மைதான் சான்றோரின் விலை உயர்ந்த அணிகலன் என்கிறார் வள்ளுவர். சான்றோர்க பலரும் போற்றிய நேர்மை இன்று மிகவும் அருகி வருகின்றது. பொய், புரட்டு, பித்தலாட்ட ஏமாற்று வேலை, பொறாமை, திருட்டு, ஊழல், லஞ்சம், நயவஞ்சக எண்ணம் போன்ற அதிகரித்து வரும் இன்றைய கலியுகத்தில், மனிதர்கள் ஒரு நாளைக்குச் சுமார் 200 முற பொய் பேசுகிறார்கள் என்று"வுாந டிழழம ழக டநைள" என்ற நூலை எழுதுவதற்காக ஆண்டுகளாக ஆய்வு மேற்கொண்ட ஹிர்ஷ் கோல்ட்பெர்க்என்பவர் கூறியுள்ளார். தனக் நேர்மையாக இருப்பது உன்னதம் ஆதலால் பூமியில் நேராக வாழ்பவர்கள் அனைவரும் சாமிக் நிகரானவர்கள் என்கிறார் கவியரசர்.



உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்

என்ற வள்ளுவத்தை வகுப்பறை சென்று படிக்காத முனியம்மா, அடுத்தநாள் காலை இருசக்கர வாகனங்கள் விற்கும் கடைக்குச் சென்று நகையைத் தவறவிட்டுச் சென்றவரை வரவழைத்து நகைக்கான அடையாளத்தைக் கேட்டு அவரிடம் நகைகளை ஒப்படைக்கின்றாள். தன் மகனிடம் "இந்தப் புளியமரத்துக்கும் அந்த வேப்ப மரத்துக்கும் நாமளா தண்ணி ஊத்றோம்; மரங்களே அப்படி இருக்கிறப்போ மனசங்க நாம ரொம்ப நல்லவங்களாயிருக்கணும்ல" (பரிசு,ப.12) என்கிறாள். நகையைப் பெற்றுக்கொண்டவர் அதற்குக் கைம்மாறாக 1000 ரூபாயைத் தன் மகனிடம் கொடுக்கின்ற போது அதனை வாங்க மறுத்துவிடுகின்றாள். அந்தக் கிராமத்து ஏழைத் தாயின் உள்ளம் உணர்ந்த சங்கர், இந்தத் தாயின் நல்ல மனசுக்கு மிகப் பெரிய உதவியைச் செய்ய வேண்டும் என்று நினைத்து அத்தாயின் மகள் படிக்கும் பள்ளிக்குச் சென்று விசாரிக்கின்றார். ஐந்து ஆண்டுகள் கழித்துப் பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத்தேர்வில் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண் பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழாவில் காருண்யா, கலெக்டரிடம் பரிசுபெற்ற போது, காருண்யாவின் மருத்துவப் படிப்பிற்கான செலவு முழுவதையும் தானே ஏற்றுக்கொள்வதாகக் கூறினார். முனியம்மாவின் நேர்மையைப் பலரும் அறியும்படி சங்கர், மேடையில் கூறியவுடன் கண்களாலும் கரங்களாலும் தன் நன்றியைத் தெரிவித்தாள் முனியம்மா. பல ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள நகைகளுக்கு ஆசைப்படாத முனியம்மாவின் 'நேர்மை' அவளின் மகள் காருண்யாவிற்கு வாழ்வளிக்கும் பரிசானது. ஆயிரம் ரூபாய் அன்பளிப்பை மறுத்த அவளின் 'உன்னதம்' இவ்வுலகிலேயே கைம்மாறு பெற்றுத் தந்தது. காலத்தினால் உதவி செய்த முனியம்மாவிற்குச் செய்ந்நன்றி மறவாமல் மேடையில் பரிசளிக்கிறார் சங்கர்.

**அன்பு**

'அன்புதான் உலகஜோதி,அன்புதான் இன்ப ஊற்று.அன்புதான் உலக மகாசக்தி'

என்றார் புத்தர். மனிதகுலம் தழைத்து ஓங்க அன்பே அடிப்படை ஆதலால் அன்பு தன்னில் வையம் செழிக்கும் என்றார் பாரதியார். வையம் செழித்தோங்க குடும்ப உறவுகள் அன்பால் பிணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். நல்ல மனைவி, நல்ல கணவன், நல்ல குழந்தைகள், நல்ல குடும்பம் தெய்வீகம் என்றார் கண்ணதாசன். எந்தக் குடும்பத்தில் பிறக்கின்ற குழந்தைகளாக இருந்தாலும் அவர்கள் நல்லவர்களாகவே இருப்பர் ஆதலால், எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவன் நல்லவன் ஆவதும் தீயவன் ஆவதும் அன்னை வளர்ப்பினிலே என்றார் திரைக்கவிஞர்.

கணவனும் மனைவியும் வேலைக்குச் செல்ல வேண்டிய இன்றைய பொருளாதாரச் சூழலில் குழந்தைகளைக் கவனிப்பதற்கோ, அவர்களுடன் பேசுவதற்கோ நேரம் இல்லை. அவ்வாறான சூழலில் வளரும் குழந்தைகள் தனிமையில் விடப்படுகின்றார்கள். அதுவும் ஒற்றைப் பிள்ளையாக இருந்தாலோ சொல்லவே வேண்டியதில்லை. ஒற்றைப் பிள்ளையாக வளரும் குழந்தைகளைப்



Scanned with CamScanner